கஞ்சம்பட்டி கால்வாய் திட்டம்: சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் ஆய்வு

புதிய வழித்தடத்தில் செயல்படுத்த விவசாயிகள் எதிர்ப்பு

கமுதி, ஜூலை 6: கமுதி அருகே 15 ஆண்டுகளாக கிடப்பில் போடப்பட்ட கஞ்சம்பட்டி கால்வாயை தூர்வார சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் திங்கள்கிழமை ஆய்வு மேற்கொண்ட போது திட்டத்தை புதிய வழித்தடத்தில் செயல்படுத்த வேண்டாம் என கிராம மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை- பந்தல்குடிக்கு இடைப்பட்ட வால்வாங்கி பகுதியிலிருந்து தொடங்கும் கஞ்சம்பட்டி கால்வாய் ராமநாதபுரம் மாவட்டத்துக்குள் பாய்ந்து 50-க்கும் மேற்பட்ட கிராம கண்மாய்கள், விவசாய நிலங்கள் பயனடைந்து வந்தன. இந்த நிலையில், கடந்த 2010- ஆம் ஆண்டு இந்த கால்வாயை தூர்வார ரூ.15 கோடி ஒதுக்கப்பட்டு, முதல் கட்டமாக சிறிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு, இதற்கு ரூ. 5 கோடி வரை செலவிடப்பட்டது. பிறகு இந்தத் திட்டம் கிடப்பில் போடப்பட்டது. இதற்கிடையே ராமநாதபுரம் மாவட்ட விவசாயிகள், விவசாய சங்கங்கள் தொடர்ந்து தமிழக அரசுக்கும், மாவட்ட நிர்வாகத்துக்கும் கஞ்சம்பட்டி கால்வாயை தூர்வாரக் கோரிக்கை விடுத்தனர். இதைத் தொடர்ந்து ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் மா. சிவகுரு பிரபாகரன் பரிந்துரையின் பேரில் ரூ.54 கோடியில் 21 கி.மீ. தொலைவுக்கு கால்வாயை தூர்வார திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு ஆய்வு நடத்தப்பட்டது.

கஞ்சம்பட்டி கால்வாயை தூர்வாரும் திட்டத்தை ஆய்வு செய்ய வந்த சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணைய உறுப்பினர் நந்தினியிடம் கால்வாயின் பழைய வழித்தடம் குறித்து விளக்கிக் கூறிய தென்மாவட்ட விவசாய சங்க மாவட்டச் செயலர் மு. மலைச்சாமி.

இதையடுத்து, திங்கள்கிழமை கால்வாயை தூர்வார சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணைய உறுப்பினர் நந்தினி தலைமையில், கமுதி காவல் துணைக் கண்காணிப்பாளர் கணேசன், கமுதி வட்டாட்சியர் முருகேசன் ஆகியோர் முன்னிலையில் ஆய்வுப் பணிகள் தொடங்கின.

அப்போது ராமநாதபுரம் மாவட்டத்துக்குள் உள்ள திம்மநாதபுரம், இதைச் சுற்றியுள்ள 50-க்கும் மேற்பட்ட கிராம மக்கள், தென்மாவட்ட விவசாயிகள் சங்க மாவட்டச் செயலர் மு. மலைச்சாமி, துணைத் தலைவர் கருத்தரிவான் செந்தூர்பாண்டியன், பம்மனேந்தல் செல்லப்பாண்டியன், திம்மநாதபுரம் முன்னாள் ஊராட்சித் தலைவர் அய்யரப்பன் ஆகியோர் தலைமையில் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினர்.

அப்போது கஞ்சம்பட்டி கால்வாய் திட்டத்தை 15 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த கால்வாயின் பழைய வழித்தடமான செங்குளம், பரளச்சி, பூலாங்கால், கீழ்குடி, பெரியமணக்குளம் வழித்தடத்திலேயே தொடர வேண்டும்.

அந்த வழித்தடத்தில் உள்ள தனியார் சூரிய சக்தி நிறுவனங்களின் ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும். புதிய வழித்தடத்தில் கால்வாய் அமைக்கும் திட்டத்தை அனுமதிக்க முடியாது. இதனால் திம்மநாதபுரம் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள 120 ஏக்கருக்கு மேலான விவசாய நிலங்கள் பறிபோகும் எனத் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இதையடுத்து அதிகாரிகள் அரசுக்கு அறிக்கை அனுப்பி அடுத்த கட்ட பணிகள் தொடங்கப்படும் எனத் தெரிவித்து விட்டு திரும்பிச் சென்றனர்.

திருச்சிற்றம்பல குருநாதசுவாமி கோயிலில் வருஷாபிஷேகம்

ராஜபாளையம், ஜூலை 6: விருதுநகர் மாவட்டம், ராஜபாளையத்தில் திருச்சிற்றம்பல குருநாதசுவாமி கோயிலில் வருஷாபிஷேகம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

ராஜபாளையம் - மதுரை சாலையோரம் அமைந்துள்ள இந்தக் கோயிலில் வருஷாபிஷேக விழாவை முன்னிட்டு சனிக்கிழமை மாலை முதல் யாக சாலை பூஜைகள் தொடங்கியது. இதைத் தொடர்ந்து காலை, மாலை யாக வேள்வி, சிறப்புப் பூஜைகள் நடைபெற்றன.

இதையொட்டி ஞாயிற்றுக்கிழமை காலை சிவாச்சாரியர் வேத மந்திரங்கள் முழங்க திருச்சிற்றம்பல குருநாதசுவாமி விமான கோபுரக் கலசத்துக்கு புனித நீர் ஊற்றினர். பின்னர் பரிவாரத் தெய்வங்களுக்கும் கும்பநீர் ஊற்றி சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன.

இதைத் தொடர்ந்து சிறப்பு அலங்காரத்தில் குருநாதசுவாமி காட்சி அளித்தார். பின்னர் பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. விழாவில் ராஜபாளையம் சுற்றுவட்டாரப் பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். இதற்கான ஏற்பாடுகளை வருஷாபிஷேக விழாக் கமிட்டியினர் செய்தனர்.

தென்னை விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

ராமேசுவரம், ஜூலை 6: பேரவைத் தேர்தலின் போது தவெக அளித்த வாக்குறுதிப் படி அனைத்து விவசாயக் கடன்களையும் தள்ளுபடி செய்யக் கோரி ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தமிழ்நாடு தென்னை விவசாயிகள் சங்கம் சார்பில் திங்கள்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

முன்னதாக பேரணியாக சென்ற விவசாயிகள் சங்கத்தினர் மாவட்ட தலைவர் அப்துல் முனாய் தலைமையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது தவெக அரசு தேர்தல் வாக்குறுதிப் படி குறு, சிறு விவசாயிகள் அனைவருக்கும் 100 சதவீத கடன் தள்ளுபடி செய்ய வேண்டும். தென்னை விவசாயிகளுக்கு வணிக வளாகம் அமைக்க வேண்டும் என்பன உள்ளிட்ட 7 அம்சக் கோரிக்கை வலியுறுத்தி முழக்கமிட்டனர்.

நியாயவிலைக் கடை புதிய கட்டடம் திறப்பு

மானாமதுரை, ஜூலை 6: சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் ஒன்றியம், மடப்புரத்தில் நியாய விலைக்கடை புதிய கட்டடம் திறப்பு விழா திங்கள்கிழமை நடைபெற்றது.

மக்களவை உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டப்பட்ட இந்தக் கட்டடத்தை சிவகங்கை தொகுதி மக்களவை உறுப்பினர் கார்த்தி சிதம்பரம் திறந்து வைத்தார்.

பின்னர் அவர் குடும்ப அட்டைதாரர்களுக்கு உணவுப் பொருள்களை வழங்கினார். இதில் காங்கிரஸ் மாவட்டத் தலைவர் ஏ.சி. சஞ்சய், சட்டப்பேரவை உறுப்பினர் இளங்கோவன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மடப்புரத்தில் திங்கள்கிழமை நியாய விலைக்கடை புதிய கட்டடத்தை திறந்து வைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கு உணவு பொருள்களை வழங்கிய மக்களவை உறுப்பினர் கார்த்தி சிதம்பரம்.

பொறியியல் கல்லூரி புரிந்துணர்வு ஒப்பந்தம்

காரைக்குடி, ஜூலை 6: சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அருகேயுள்ள அமராவதிபுதூர் ஸ்ரீ ராஜ ராஜன் பொறியியல், தொழில்நுட்பக் கல்லூரியும், சென்னை மேயா லேப்ஸ் நிறுவனமும் தொழில் கல்வி இணைப்பை வலுப்படுத்தும் வகையில் திங்கள்கிழமை புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொண்டன.

இந்த ஒப்பந்தத்தில் கல்லூரியின் தலைவர் சொ. சுப்பையா, மேயா லேப்ஸ் நிறுவனத் தலைவர் ஏ.வி. மெய்யப்பன் ஆகியோர் கையொப்பமிட்டனர்.

இதன் மூலம், பல்வேறு பொறியியல் துறைகளில் பயிலும் மாணவர்களுக்கு நவீன ஸ்மார்ட் தொழில் துறை உபகரணங்கள், மேம்பட்ட தொழில்நுட்பங்கள் குறித்த தொழில்நுட்பப் பயிற்சிகள், பணிமனைகள், கருத்தரங்குகள், தொழில்சாலைப் பார்வைகள், உள்ளுறை தொழில் பயிற்சிகள், நேரடி தொழில் துறைத் திட்டங்கள், பல்வேறு தொழில் துறை சார்ந்த செயல்பாடுகள் வழங்கப்படவுள்ளன. இந்த நிகழ்வில் செஞ்சிலுவைச் சங்க மாவட்டத் தலைவர் வி. சுந்தரராமன், கல்லூரி முதல்வர் அ. முத்துக்குமார், முதன்மையர்கள் எம். சிவக்குமார், அ. ஆண்ட்ரூ, மேயா லேப்ஸ் ஒருங்கிணைப்பாளர் ஜி.சரண்பால், வி. புவனா பேராசிரியர்கள், நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

அமராவதிபுதூர் ஸ்ரீ ராஜ ராஜன் பொறியியல், தொழில்நுட்ப கல்லூரியுடன் திங்கள்கிழமை புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்ட சென்னை மேயா லேப்ஸ் நிறுவனத்தினர். உடன் கல்லூரி நிர்வாகத்தினர்,

சிவகாசியில் சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு மிதிவண்டி ஊர்வலம்

சிவகாசி, ஜூலை 6: சிவகாசி எஸ்.எப்.ஆர். மகளிர் கல்லூரி நாட்டு நலப் பணித் திட்டம் சார்பில் சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு மிதிவண்டி ஊர்வலம் திங்கள்கிழமை நடைபெற்றது.

கல்லூரி வளாகத்தில் தொடங்கிய மிதிவண்டி ஊர்வலத்துக்கு முதல்வர் ஆர். சுதா பெரியதாய் தலைமை வகித்தார். சிவகாசி நகர் காவல் நிலைய ஆய்வாளர் லட்சுமி பிரபா கொடியசைத்து தொடங்கி வைத்தார். முன்னதாக அவர் சாலையில் செல்லும் போது பின்பற்ற வேண்டிய விதிமுறைகளை மாணவிகளிடம் விளக்கினார். இந்த ஊர்வலம் கல்லூரி வளாகத்தில் தொடங்கி, சிறுகுளம் கண்மாய் சாலை, வேலாயுதம் சாலை வழியாகச் சென்று மீண்டும் கல்லூரி வளாகத்தை அடைந்தது. ஊர்வலத்தின் போது, மாணவிகள் போக்குவரத்து விதிகள் குறித்த விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை வைத்திருந்தனர்.

இதற்கான ஏற்பாடுகளை நாட்டு நலப் பணித் திட்ட அலுவலர்கள் செய்திருந்தனர்.

சிவகாசி எஸ்.எப்.ஆர். மகளிர் கல்லூரி சார்பில் திங்கள்கிழமை நடைபெற்ற சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு மிதிவண்டி ஊர்வலத்தில் பங்கேற்ற மாணவிகள்.

குடிசை மாற்று வாரிய குடியிருப்பு அருகேயுள்ள குப்பைக் கிடங்கை அகற்ற வலியுறுத்தல்

ராமேசுவரம், ஜூலை 6: ராமநாதபுரம் அருகே கிழக்கு கடற்கரை சாலையில், குடிசை மாற்று வாரிய குடியிருப்பு அருகேயுள்ள நகராட்சி குப்பைக் கிடங்கை அகற்றக் கோரி, மாவட்ட ஆட்சியரிடம் பொதுமக்கள் திங்கள்கிழமை மனு அளித்தனர்.

மனுவில் அவர்கள் கூறியிருப்பதாவது: ராமநாதபுரம் அருகே கிழக்கு கடற்கரை சாலையில் குடிசை மாற்று வாரியத்துக்குச் சொந்தமான குடியிருப்பு உள்ளது. இங்கு 1,000-க்கும் மேற்பட்ட வீடுகள் உள்ளன. இதன் அருகே ராமநாதபுரம் நகராட்சிக்குச் சொந்தமான குப்பைக் கிடங்கு உள்ளது. இந்த குப்பைக் கிடங்கில் தொடர்ந்து தீ எரிந்து கொண்டே இருப்பதால் அதிலிருந்து வெளியேறும் புகை குடியிருப்பில் வசிப்பவர்களுக்கு மூச்சுத் திணறல் ஏற்படுவதுடன், முதியவர்கள், குழந்தைகள், நோயாளிகளுக்கு தொற்று நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. எனவே, இந்த குப்பைக் கிடங்கை மக்கள் நடமாட்டம் இல்லாத பகுதிக்கு மாற்ற வேண்டும் என அதில் குறிப்பிட்டனர்.

இன்றைய நிகழ்ச்சிகள்

சிங்கம்புணரி
சிவபுரிப்பட்டி சுயம் பிரஹ தீஸ்வரர் கோயில்: அஷ்டமி பூஜை, காலை 10.

காரைக்குடி
புத்தகத் திருவிழா: பார்வையாளர்கள் அனுமதி, மாலை 4.30, மாணவர்களுக்கான வினாடி-வினா, மாலை 5, பள்ளி மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள், சிறப்பு விருந்தினர்கள்: தொழிலதிபர்கள் பிஎல்.பி. பாலசுப்பிரமணியன், பி.ஆர்.சி. வீரப்பன், கம்பன் மணிமண்டபம், மாலை 6.30.

பரமக்குடி
மீனாட்சியம்மன் கோயில்: ஸ்ரீமீனாட்சி சுந்தரேசுவரர் சுவாமிக்கு சிறப்பு அபிஷேக ஆராதனைகள். காலை 8.10.

ராஜபாளையம் சோழபுரம்
அடைக்கலம் காத்த அய்யனார் கோயிலில் மண்டல பூஜை, காலை 10.

ஆவணம் காணவில்லை

விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், சிவகாசி மாநகராட்சி, 113A, வேலாயுதம் ரோடு என்ற முகவரியில் குடியிருந்து வரும் ராமலூர்த்தி அவர்கள் குமாரர் திரு.R.ஞானகிரமணன் அவர்களது பெயரில் ஹைதராபாத்தில் Shamshabad சார்பதிவாளர் அலுவலகம் ஆவண எண்.71/1996 என்ற எண்ணில் பதிவு செய்யப்பட்ட அசல் கிரய பத்திரம் கடந்த 16.05.2026ம் தேதியன்று சிட்டி யூனியன் பேங்க் திருத்தங்கல் கிளையில் அருகில் உள்ள டீ கடைக்கு செல்லும் வழியில் ஆவணம் தொலைந்து விட்டது. மேற்கண்ட அசல் ஆவணம் கிடைக்கப் பெற்றால் கீழ்கண்ட முகவரியில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

R.ஞானகிரமணன்,
113A, வேலாயுதம் ரோடு, சிவகாசி.
செல் : 98940 88668

ஈ.ஐ.டி.-பாரி (இந்தியா) லிமிடெட்
CIN: L24211TN1975PLC006989
பதிவு அலுவலகம்: 'டேர் ஹவுஸ்', பாரீஸ் கார்னர், சென்னை - 600 001.
Tel: 044-25306789
E- mail id: investorservices@parry.murugappa.com; Website: www.eidparry.com

ஈ.ஐ.டி. - பாரி (இந்தியா) லிமிடெட் நிறுவன பங்குதாரர்களுக்கு ஒரு அறிவிப்பு

காணொலி (VC)/ இதர ஒலி ஒளி சாதனங்கள் (OAVM) வாயிலாக 51 வது வருடாந்திர பொதுக்குழு கூட்டம் கூட்டுவது தொடர்பான தகவல்

பங்குதாரர்களின் கவனத்திற்கு தெரிவிக்கப்படுவது என்னவெனில், நிறுவனத்தின் 51வது வருடாந்திர பொதுக்குழு கூட்டமானது (AGM) **புதன்கிழமை, ஆகஸ்ட் 12, 2026** அன்று மாலை **3:00 மணிக்கு** (IST), VC / OAVM வாயிலாக, நிறுவனங்கள் சட்டம், 2013 மற்றும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளின் பொருந்தக்கூடிய விதிகள் மற்றும் செபி (பட்டியல் கடமைகள் மற்றும் வெளியீட்டு தேவைகள்) கட்டுப்பாடுகள், 2015, மற்றும் காம்ப்பரே, விவகார அமைச்சகம் (எம்சிஏ) மற்றும் இந்திய பங்குகள் பரிவர்த்தனை வாரியம் (செபி) மற்றும் பிற தொடர்புடைய அதிகாரிகள் அவ்வப்போது வெளியிட்டுள்ள சுற்றறிக்கைகளின் பொருந்தக்கூடிய விதிமுறைகளுக்கு இணங்க நடத்தப்படுகிறது. AGM அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள செயல்பாடுகளை பரிசீலித்து நிறைவேற்றுவதற்காக இக்கூட்டம் நடைபெறும் என்பதை பங்குதாரர்களுக்கு இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

51வது AGM அறிவிப்பு மற்றும் 2025-26 வருடாந்திர அறிக்கை ஆகியவை முறையே மின்னணு முறையில் பங்குதாரர்களுக்கு வைத்து பெயரிடப்பட்டுள்ளன (DPs) காகித வடிவில் வைத்திருப்பவர்கள் நிறுவனத்தின் பதிவாளர் மற்றும் பங்கு மாற்று முகவர் (ஆர்டிஏ) மெசர்ஸ் கேபிள் டெக்னாலஜிஸ் லிமிடெட்டிலும் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு மின்னணு முறையில் அனுப்பி வைக்கப்படும். இதுபோலவும், சுற்றறிக்கைக்கு இணங்க, 51வது AGM அறிவிப்பு மற்றும் வருடாந்திர அறிக்கையின் காகித நகல் குறிப்பாகக் கோரும் உறுப்பினர்கள், தங்கள் ஃபோலியோ விவரங்கள் / கிளையண்ட் ஐடியை முறையாக குறிப்பிட்டு einward.ris@kfintech.com or investorservices@parry.murugappa.com என்கின்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

51வது AGM அறிவிப்பு மற்றும் வருடாந்திர அறிக்கை நிறுவனத்தின் இணையதளத்தில், அதாவது www.eidparry.com பங்குச் சந்தைகளின் இணையதளங்களான, பிஎஸ்இ லிமிடெட்டின் www.bseindia.com மற்றும் நேஷனல் ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் ஆப் இந்தியா லிமிடெட்டின் www.nseindia.com மற்றும் மின்னணு வாக்களிப்பு வசதியை வழங்க நியமிக்கப்பட்ட முகமை, நேஷனல் செக்யூரிட்டீஸ் டெபாசிட்டரி லிமிடெட்டின் இணையதளமான https://evoting.nsdl.com -ல் கிடைக்கும்.

2025-26 நிதி ஆண்டிற்கான வருடாந்திர அறிக்கையை அனுகுவதற்கு இணையதள விவரங்களை வழங்கும் தனித்தனி தகவல் தொடர்பு இணைப்பை வழங்கும் ஒரு கதவும், நிறுவனம் / DPs உடன் தங்கள் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்யாத பங்குதாரர்களுக்கு தனியாக அனுப்பப்படும்.

1. 2025-26 நிதியாண்டுக்கான வருடாந்திர அறிக்கையுடன் 51வது AGM அறிவிப்பைப் பெறுவதற்கு மின்னஞ்சல் முகவரிகளைப் பதிவுசெய்தல்/புதுப்பிக்கும் முறை:

தாள் வடிவில்	பரிந்துரைக்கப்பட்ட படிவம் ISR-1ல் (நிறுவனத்தின் இணையதளத்தில் கிடைக்கும்: https://www.eidparry.com/shareholder-assistance/) முகவரியையும் குறிப்பிட்டு உறுப்பினர் கையொப்பமிட்ட கோரிக்கை கடிதத்தின் நகலுடன் நிரந்தர கணக்கு எண்ணின் (PAN) சுய-சான்றளிக்கப்பட்ட நகல் மற்றும் உறுப்பினரின் முகவரிக்கு ஆதாரமாக ஏதேனும் ஆவணத்தின் (ஆதார் அட்டை, ஓட்டுநர் உரிமம், வாக்காளர் அடையாள அட்டை, பாஸ்போர்ட்) சுய-சான்றளிக்கப்பட்ட நகல் விவரங்களைப் பதிவு செய்யவும்/புதுப்பிக்கவும்.
மின்னணு வடிவில்	உங்கள் டிமேட் கணக்கில் விவரங்களைப் பதிவு செய்ய அல்லது புதுப்பிக்க உங்கள் டெபாசிட்டரி பங்கேற்பாளரால் அறிவுறுத்தப்பட்ட செயல்முறையை பின்பற்றவும்.

2. மின்னணு வாக்குப்பதிவு மூலம் வாக்களிக்கும் முறை:

- AGM அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வணிகங்களில் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு முறை மூலம் பங்குதாரர்கள் தங்கள் வாக்குகளை தொலைவிலிருந்து பதிவு செய்ய வாய்ப்பு கிடைக்கும்;
- பங்குதாரர்கள் மின்னணு வடிவில் அல்லது காகித வடிவில் வைத்திருக்கும் பங்குதாரர்கள், நிறுவனப் பங்குதாரர்கள் உட்பட மேலும் தங்களது மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்யாத பங்குதாரர்களுக்கான வாக்களிக்கும் முறை, AGM அறிவிப்பின் ஒரு பகுதியாக அமைந்துள்ள குறிப்புகளில் வழங்கப்படும். மேலும், இந்த விவரங்கள் நிறுவனத்தின் இணையதளத்தில் https://www.eidparry.com/shareholders-meeting/ என்ற முகவரியில் பதிவேற்றப்படும் மற்றும் AGM அறிவிப்பிலும் கிடைக்கும்.

VC / OAVM மூலம் AGMல் பங்கேற்பதற்கான விரிவான வழிமுறைகள் மற்றும் தொலைதூர மின்னணு வாக்களிப்பு அல்லது AGMன் போது மின்னணு வாக்களிப்பு பற்றிய தகவல்கள் பங்குதாரர்களுக்கு AGM அறிவிப்பில் விரிவாக வழங்கப்படும்.

எம்சிஏ மற்றும் செபி வழங்கிய பொருந்தக்கூடிய சுற்றறிக்கைகளுக்கு இணங்க, நிறுவனத்தின் அனைத்து பங்குதாரர்களின் தகவல் மற்றும் நன்மைக்காக இந்த அறிவிப்பு வெளியிடப்படுகிறது.

ஈ.ஐ.டி. - பாரி (இந்தியா) லிமிடெட்-க்காக
Sd/-
பில்வ மோகன் ரத்
நிறுவன செயலாளர்

இடம் : சென்னை
தேதி : ஜூலை 06 , 2026

இண்டஸ்இண்ட் பேங்க் லிட்.,
பதிவு அலுவலகம்: 2401, ஜெனரல் திம்மையா சாலை (கன்டோன்மெண்ட்), புனே -411 001.
நுகர்வோர் நிதிப் பிரிவு: புதிய எண்.34, G.N. செட்டி சாலை, தி.நகர், சென்னை-600 017

கவாதீன (POSSESSION) அறிவிப்பு

2002 ஆம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்க விதிகள் 8 (1)-ன் படி]
2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை நொக்கமாக்குதல், நிதிச் சொத்துகளைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் படி (இனி 'சட்டம்' எனக் குறிப்பிடப்படும்), கீழே கையொப்பமிட்டுள்ளவர், M/s. இண்டஸ்இண்ட் பேங்க் லிட்.-ன் அதிகாரபூர்வ அலுவலராக இருக்கிறபடியால், மேற்படி பிரிவு 13(12)-ன் கீழும், அதற்குத் தொடர்புடைய 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க விதிகள் 9-ன் கீழும்,(இனி 'விதிகள்' எனக் குறிப்பிடப்படும்) தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி பின்வரும் கடன்தாரர்கள் மற்றும் ஜாமீன்தாரர்கள் அவர்களுக்கு பின்வரும் கோரிக்கை அறிவிப்பின (DEMAND NOTICE) அனுப்பி அதற்த அறிவிப்பு கிடைத்த தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் அதில் காணும் பாக்கித்தொகையைச் செலுத்துமாறு கோரியிருந்தார்.
ஆனால், கடன்தாரர்கள் மேற்படி பாக்கித் தொகை மற்றும் வட்டியை செலுத்து மேற்படி காலத்திற்குள் செலுத்தத் தவறிவிட்டதால், கடன்தாரர்கள், மற்றும் பொதுமக்களுக்கு இதன் மூலம் அறிவிப்பது யாதெனில், மேற்படி சட்டம் 13(4) மற்றும் அதற்குத் தொடர்புடைய விதிகள் 8-ன் கீழ் தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துகளை பின்வரும் கடன்தாரர்கள் மற்றும் ஜாமீன்தாரர்களுக்கு எதிரே காணும் தேதியில் வங்கியின் அதிகாரபூர்வ அலுவலர் தமது அடையான கவாதீனத்தில் (SYMBOLIC POSSESSION) எடுத்துக் கொண்டுள்ளார். எனவே, இதன் மூலம் எச்சரிக்கப்படுவது யாதெனில், மேற்படி அடமான சொத்து விஷயத்தில் எவரும் எவ்வித மேலும் வைத்துக் கொள்ளக் கூடாது. மீறி வைத்துக் கொண்டால் அது M/s.இண்டஸ்இண்ட் பேங்க் லிட்., வங்கிக்குச் செலுத்த வேண்டிய பாக்கித்தொகை மற்றும் அதன் மீதான வட்டி மற்றும் எதிர்பாரா செலவினங்கள், கட்டணங்கள், செலவுகள் செலுத்துவதற்குக் கட்டுப்பட்டதாகும். மேலும், கடனுக்கு ஈடான சொத்துகளை மீட்பது தொடர்பான கால அவகாசம் தொடர்பான மேற்படி சட்டம் பிரிவு 13, உட்பிரிவு (8)-ன் ஏற்றத்துகளை கவனத்தில் கொள்ளுமாறு கடன்தாரர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

வரிசை எண்	கடன்தாரர்/ஜாமீன்தாரர் பெயர்/ கடன் ஒப்பந்த எண்	கோரிக்கை அறிவிப்பு தேதி /கவாதீன தேதி	நிலுவைத் தொகை ரூ.
1.	கடன்தாரர்:திரு. கோபஸ்வரன் S, (C/O: செந்தில்குமார்) இணை கடன்தாரர்(கள்): திருமதி.ஜான்சி ராணி K, (C/O:கோபஸ்வரன்) ஒப்பந்த எண்:TMS05719M (தேதி:29.03.2021)	23.02.2026 / கவாதீன தேதி: 03-07-2026	ரூ.9,11,194.96/- (ரூபாய் ஒன்பது லட்சத்து பதினொராயிரத்து நூற்று தொண்ணூற்று நான்கு மற்றும் தொண்ணூற்று எட்டு பைசா மட்டும்) 23.02.2026 அன்றுள்ளபடி,

அடமான சொத்துகள் விவரம்: நிலம் மற்றும் கட்டிடம் மற்றும் அதன் அனைத்து முக்கிய பகுதிகள், அமைவிடம், விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை வட்டம், விருதுநகர் பதிவு மாவட்டம், சிவகாசி சார்- பதிவு மாவட்டம், விஜயகரிசல்குளம் கிராமம், பழைய நத்தம் சர்வே எண்: 87/6B (பகுதி), புதிய சர்வே எண்: 87/6B2 பரப்பளவு 178.64 சதுர மீட்டர் நிலம் மற்றும் வீடு கதவு எண்:2/132. இதன் எல்லைகள்: வடக்கு: கிழக்கு மற்றும் மேற்கு பொது பாதை; கிழக்கு:நத்தம் சர்வே எண் 87/6B3 நிலம்; தெற்கு அண்ணாமலை தேவர் என்பவருக்குச் சொந்தமான நிலம்; மேற்கு: நத்தம் சர்வே எண் 87/6B1 நிலம். இதன் அளவீடுகள்: வடக்கு பக்கம் கிழக்கு-மேற்காக 12.20 மீட்டர் மற்றும் தெற்கு பக்கம் 11 மீட்டர்; கிழக்கு பக்கம் வடக்கு-தெற்காக 16.20 மீட்டர் மற்றும் மேற்கு பக்கம் 14.60 மீட்டர்; மொத்தம் 178.64 சதுர மீட்டர் பரப்பளவு. இச்சொத்து அமைவிடம் வெம்பக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், விஜயகரிசல்குளம் ஊராட்சி எல்லை, மேற்படி இடத்தில் கட்டப்பட்டுள்ள கட்டிடம் மற்றும் அதிலுள்ள மரச்சாமான்கள், பொருத்துதல்கள் மற்றும் அதனுடன் இணைந்த இதர சாதனங்கள் உட்பட.

தேதி:03-07-2026,
இடம்:சிவகாசி
ஒம்/- அதிகாரபூர்வ அலுவலர்
இண்டஸ்இண்ட் பேங்க் லிட்.-க்காக

Chola murugappa
சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்
CIN: L65993TN1978PLC007576
பதிவு அலுவலகம்: "சோழா கிரெஸ்ட்", C54-55 & குப்பர் B-4, திரு-வி-க தொழிற் பேட்டை, கிண்டி, சென்னை - 600 032.
Phone number: 044-40907172;
Email: investors@chola.murugappa.com Website: www.cholamandalam.com

உறுப்பினர்களுக்கு அறிவிப்பு

இந்த அறிவிப்பு மூலம் தெரிவிப்பது யாதெனில்,

1. நிறுவனங்கள் சட்டம், 2013 மற்றும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகள், செக்யூரிட்டீஸ் அண்ட் எக்சேஞ்ச் போர்டு ஆப் இந்தியா (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) விதிமுறைகள், 2015 (பட்டியல் விதிமுறைகள்) மற்றும் கார்ப்பரேட் விவகார அமைச்சகம் மற்றும் செக்யூரிட்டீஸ் அண்ட் எக்சேஞ்ச் போர்டு ஆப் இந்தியா (செபி) வெளியிட்ட சுற்றறிக்கைகள் ஆகியவற்றுக்கு இணங்க, ஏப்ரல் 30, 2026 தேதியிட்ட அறிவிப்பில் உள்ள அலுவல்களை பரிவர்த்தனை செய்ய சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்டின் 48வது வருடாந்திர பொதுக் கூட்டம் (AGM) **செவ்வாய்க்கிழமை, ஜூலை 28, 2026 அன்று மாலை 3.30 மணிக்கு** காணொளிக் காட்சி (VC) மூலம், நடைபெறும் என்று இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது.
2. வைப்புத்தொகை பங்கேற்பாளர் (DPs) அல்லது நிறுவனத்தின் பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவர் (RTA), M/s. கேபிள் டெக்னாலஜிஸ் லிமிடெட் உடன் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு நிறுவனம் 2025-26-ஆம் நிதி ஆண்டிற்கான வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பை (மின்னணு - வருடாந்திர பொதுக் கூட்ட ஆவணங்கள்) **ஜூலை 6, 2026, திங்கட்கிழமை** அன்று மின்னணு முறையில் அனுப்பியுள்ளது. மின்னணு வருடாந்திர பொதுக் கூட்ட ஆவணங்கள் www.cholamandalam.com, www.evoting.nsdl.com ஆகிய இணையதளங்களிலும், www.bseindia.com மற்றும் www.nseindia.com ஆகிய பங்குச் சந்தை இணையதளங்களிலும் கிடைக்கும்.
3. மேலும், RTA / DPல் தங்கள் மின்னஞ்சல் முகவரியைப் பதிவு செய்யாத உறுப்பினர்களுக்கு 2025-26 நிதி ஆண்டிற்கான மின்னணு-வருடாந்திர பொதுக்கூட்ட ஆவணங்களை அணுகுவதற்கான இணையதள இணைப்பை வழங்கும்